திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இந்தக் கோட்டூர்புரம் நந்தனம் பகுதியை இணைக்கும் பாலத்தை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது, ஏறக்குறைய ரூ. 43 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதைக் கட்ட வேண்டுமென்று திட்டம் இட்டார்கள். இடையிலே, அவசர நிலை வந்த காலத்திலே அது தவிர்க்கப்பட்டு, பிறகு அந்த அவசர நிலை காலத்திலேயே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட இன்றையதினம் வரையில் அது நிறைவேற்றப்பட வில்லை என்று தெரிய வருகிறது. இது ஒரு செல்வந்தருடைய தலையீட்டின் காரணமாக, இந்தப் பாலம் அங்கே கட்டப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே 1972-லே இந்தப் பணிக்காக ரூ. 26 லட்சம் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, 1974-லே அந்த ரூ. 26 இலட்சம் மதிப்பீடு ரூ. 44 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1977 பிப்ரவரி திங்களில், மீண்டும் 4 வழிப் பாதையாக இல்லாமல், இரண்டு வழிப் பாதையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற காரணத்திற்காக, மீண்டும் திருத்திய மதிப்பீடுகள் ரூ. 39,20,000-க்குப் போடப்பட்டது. அந்தப் பாலத்தினுடைய முக்கிய நோக்கமே, அண்ணா சாலையிலே ஏற்படுகிற நெரிசலைத் தவிர்க்கவும், அதே நேரத்தில், பிரயாண நேரத்தைக் குறைக்கவும், எரிபொருள் செலவுகளைக் குறைக்கவும், ஆக இவற்றிக்குத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆக, திருத்திய மதீப்பீடுகளின் அடிப்படையிலே பால வேலைகள் துவங்கப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. டி. கே. கபாலி : தலைவர் அவர்களே, என்னுடைய 129-வது வட்டத்தில் திருவள்ளுவர் சிலையிலிருந்து முண்டகக் கன்னி அம்மன் கோயிலுக்குப் போகும் பாலம் இடிந்து விழும் தருவாயில் உள்ளது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி இல்லை. மூலக் கேள்வி கோட்டூர்புரம் பற்றியது.

சங்கனூர், கணபதி பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்

*வினா எண் 34—திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள சங்கனூர், கணபதி பஞ்சாயத்துப் பகுதிகளில் அடிப்படை சுகாதார, சாலை, சாக்கடை வசதிகளை ஏற்படுத்த அரசு விசேஷத் திட்டம் ஏதேனும் செயல் படுத்துகிறதா?

1981 ஜனவரி 24]

(ஆ) இணைக்கப்பட்டுள்ள பகுதிகளை சிறப்பாக நிர்வகிக்க கூடுதலாக பணியாளர்கள் நகராட்சியில் நியமனம் செய்யப் படுவார்களா?

(இ) இப்பகுதிகளுக்கு சிறுவாணி திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தக்க திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

(இ) ஆம்.

திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் மாநகராட்சியாகப் போகும் கோவை நகராட்சியோடு சில பகுதிகளைச் சேர்த்து, இப்போது 10 சதுர மைலிலிருக்கும் நகராட்சி 44 சதுர மைல் பரப்பளவை எட்டியிருக்கிறது. ஆகவே, இணைக்கப்பட்ட இது போன்ற பகுதிகள் நிறைந்த மக்கள் தொகை கொண்டிருக்கிற காரணத்தினால் மாநாடு கண்ட மதுரையைப்போல், தன்னிறைவு அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவில் நல்ல திட்டங்களை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

அதே போல் அங்கு வரவேண்டிய சிறுவாணி குடிநீர், திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடைய வேண்டும். இன்னும் அது முடிவு பெறவில்லை. அந்தக் கால தாமதத்திற்கான காரணம் என்ன என்பதையும் அமைச்சர் மூலம் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தற்போழுது ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நகராட்சிகள் பொறுத்த அளவில் தன்னிறைவுத் திட்டம் என்ற அளவில் இல்லாமல் இன்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன குறிப்பாக, கோவையைப் பொறுத்தவரையிலே அதற்கு 1, 2 மாதங்களில் மாநகராட்சியாகப் போகின்ற ஒரு நகராட்சியாக இருந்து வருகிறது. அதற்குரிய பணிகள்தான் தீவிரமாகச் செயல் படுத்தப் பட்டு வருகின்றன குறிப்பாக கோவையைப் பொறுத்தமட்டில், சிறுவானி திட்டத்தின் மூலமாகத்தான் அங்கே இருக்ககூடிய மக்களுக்குக் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்குண்டான திட்டங்கள் முடிவடைகின்ற தருவாயிலே இருந்து வருகின்றன. இந்த ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடைய வேண்டிய திட்டம் அடுத்த ஆண்டு 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடையும் என்கிற சூழ்நிலையிலே இருந்து வருகிறது. ஆகவே, இந்தச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் குடி நீர் வசதியைச் செய்து கொடுக்கக் கூடிய திட்டமாகத்தான் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

[1981 ஜனவரி 24

[முற்பகல் 10–10]

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் தொகுதியிலே சிங்கனூர், கணபதி போன்ற கிராமங்கள் நகராட்சியோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன அந்த கிராமங்களில் அபிவிருத்திப் பணியாக என்ன பணிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சங்கனூர் பகுதியில் 14 சாலைப் பணிகள், 5 சாக்கடைப் பணிகள் 48 தண்ணீர் வினியோகப் பணிகள், ஆக மொத்தம் 67 பணிகளுக்கு ரூ. 3.38 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல 20 சாலைப் பணிகள், 9 தண்ணிர் வினியோகப் பணிகள், 9 சாக்கடைப் பணிகள் போன்றவைகளுக்கு 25.61 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல கணபதி பகுதியில் 9 சாலைப் பணிகள், 3 சாக்கடைப் பணிகள், 5 தண்ணீர் பணிகள் ஆக மொத்தம் 17 பணிகளுக்கு 2.23 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் 20 பணிகளுக்கு 9 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை நகரம் விரைவில் மாநகராட்சியாகப் போகிறது. அவ்வளவு பெரிய நகரத்தில் புதிய ஏரியாக்கள் சேர்க்கப்பட்டு இன்னும் விரிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் இங்கே சுகாதாரப் பணிகளை கவனிப்பதற்காக 700க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இல்லாத குறை அந்த நகரத்தில் உள்ளது என முன்பு இதே சட்ட மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்களின் 300 பேர்களை நியமிக்கவேண்டும் என்று கூறியதே இன்னும் நிறைவேற்றாமல் இருப்பதன் காரணம் என்ன? இதனால் கோவை நகரம் குப்பை நகரம் போன்று ஆகி, குப்பைக் கூளங்கள் நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது. எனவே ஏற்கனவே சொல்லப்பட்ட 300 பேர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே ஏற்கனவே கோவை நகராட்சியின் மூலமாக துப்புரவு பணியாளர்கள் தேவை என்ற அடிப்படையில் 300 பேர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. 300 பேர்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில், இப்போது ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணிகள் தீவிரமாக நடைபெறும்.

1981 ஜனவரி 24]

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சிங்கனூர் பஞ்சாயத்துக்குட்பட்ட சாய்பாபா காலனியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு ரோடு போடுவதற்கு 2,000 ரூபாய் கொடுத்தால்தான் ரோடு போட முடியும் என்று அங்கிருக்கிற தனி அதிகாரி சொல்லுகிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்வதற்கு இது நேரமல்ல.

சென்னையில் சஞ்சய் காந்திக்குச்சிலை

*வினா எண் 35—திரு. என். எஸ். சித்தன்: மாண்புமிகு ள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் அமரர் சஞ்சய் காந்தி அவர்களுக்கு சிலை வைப்பதற்க்கு அனுமதி கேட்டு அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி சும்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கருத்து கோரப்பட்டுள்ளது. அவை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

எலத்தூர் மோட்டூர் தொழுநோய் தடுப்பு நிலையம்.

*வினா எண். 36—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் தொகுதியில் உள்ள எலத்தூர் மோட்டூர் கிராமத்தில் இயங்கி வந்த தொழுநோய் தடுப்பு நிலையம் போளூர் நகரத்திற்கு மாற்றப் பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணமென்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்காலிக மாக மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) 12—5—1980 அன்று இரவு பெய்த பலத்த மழையின் காரணமாக இந்நிலையத்தின் கட்டடம் சேத மடைந்துள்ளது.